**வடமாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின் ஆரம்ப மட்ட தேர்ச்சியற்ற சேவைக் கீழான (PL-1-2016) திணைக்களத் தொழிலாளி ( பிரத்தியேக ஆளணி) பதவிக்கான பதவியுயர்வுத் திட்டம்**

1. **நடைமுறைக்கு வரும் திகதி:**

இச் சேவை பதவியுயர்வுத்திட்டம் 2016.01.01.ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கௌரவ ஆளுநரின் அனுமதியைப் பெற்று இந்த புதிய சேவைப் பதவியுயர்வுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்

## 2.தொடர்புடைய நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| 2.1 | திணைக்களம் - தொழிற்துறைத் திணைக்களம் | தொடர்பு இல... திகதி.... |
| 2.2 | மகளிர் விவகார அமைச்சு | தொடர்பு இல... திகதி.... |
| 2.3 | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதி | தொடர்பு இல... திகதி..... |
| 2.4 | தேசிய சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழுவின் விதந்துரை | தொடர்பு இல... திகதி... |
| 2.5 | மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் விதந்துரை | தொடர்பு இல...திகதி.... |
| 2.6 | வடமாகாண பிரதம செயலாளரின் விதந்துரை | தொடர்பு இல... திகதி... |
| 2.7 | வடமாகாண கௌரவ ஆளுநரின் அனுமதி | தொடர்புஇல... திகதி... |

### 3. வரைவிலக்கணங்கள்:

3.1 “பதவியுயர்வுத்திட்டம்” என்பது “வடக்கு மாகாண தொழிற்துறைத்திணைக்களத்தின் மாகாண திணைக்கள தொழிலாளி ( பிரத்தியேக ஆளணி) ஆரம்ப மட்ட தேர்ச்சியற்ற பணியாளர் பதவியுயர்வுத்திட்டம்” குறிக்கும்.

3.2 “கௌரவ ஆளுநர்” என்ற பதம் வடக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களைக் குறிக்கும்.

3.3 “ஆணைக்குழு”என்ற பதம் வடக்கு மாகாணத்தின் மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழுவினைக் குறிக்கும்

3.4 “நியமன அதிகாரி”என்ற பதம் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் நியமனம் வழங்குவதற்குரிய அதிகாரம் எவருக்குக் கையளிக்கப்படுகின்றதோ அவரைக் குறிப்பதாகும்.

3.5 “செயலாளர்” என்ற பதம் வடக்கு மாகாணத்தில்தொழிற்துறைத் திணைக்களம் எவ்அமைச்சிற்கென ஒதுக்கப்படுகின்றதோ அவ் அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்.

3.6 ‘சேவை’ என்பது தொழிற்துறைத் திணைக்களத்தின் திணைக்கள காவலாளி (பிரத்தியேக ஆளணி) பதவிக்கான சேவையைக் குறிக்கும்.

3.7 “திருப்திகரமான சேவை” என்பது

(i) அரசாங்க அலுவலர் ஒருவர் வினைத்திறனுடனும் சிரத்தையுடனும் பணிக்கடமைகளை மேற்கொள்வதன் மூலமும் சித்தியடைய வேண்டியிருந்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதன் மூலமும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த பதவியில் நிரந்தரமாக்குவதற்கு அவசியமான தகைமைகளைப் பூர்த்தி செய்வதன் ஊடாகவும் அக் காலப்பகுதியினுள் ஈட்டப்பட வேண்டியிருந்த சம்பள ஏற்றங்கள் ஈட்டப்பட்டதும் அவர் தண்டனைக்குரிய குற்றம் எதனையும் செய்யாததுமான காலப்பகுதி ஆகும்,

3.8‘உரிய தினம்’ என்பது

ஏற்புடைய வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியெய்த வேண்டிய திகதி ‘‘குறித்த தினம்’’ என பொருள்படும். தரமுயர்வுகளின் போது குறித்த தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியெய்தும் அலுவலர்களுக்கு ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தரமுயர்வு பெறுவதற்கு உரிமையுண்டு. குறித்த தினத்துக்கு சித்தியடையாத அலுவலர்களின் தரமுயர்வு திகதி வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியெய்த எடுத்துக்கொண்ட காலப் பகுதிக்கு சமமான காலப் பகுதியால் பின்போடப்படும்.

3.9 ‘உயிர்ப்பான சேவைக்காலம்’ என்பது

குறித்த பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்று உண்மையாகவே சேவையில் ஈடுபட்டிருந்த சேவைக் காலத்தைக் குறிக்கும். அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்ட பிரசவ விடுமுறை தவிர்ந்த மற்றைய அனைத்து சம்பளமற்ற விடுமுறைக் காலப்பகுதிகளும் உயிர்ப்பான சேவைக் காலத்திற்காக கணக்கில் எடுக்கப்படமாட்டாது.

## 4. <u>சேவைத் தொகுதிகள் பற்றிய விபரங்கள்</u>

4.1 சேவைத் தொகுதி –ஆரம்ப மட்ட தொழிற் தேர்ச்சியற்ற சேவை திணைக்கள தொழிலாளி (பிரத்தியேக ஆளணி)

4.2 தரங்கள் - பதவியுயர்வு - தரம் III

பதவியுயர்வு - தரம் II,

பதவியுயர்வு - தரம் I,

பதவியுயர்வு - விசேட தரம்.

4.3 ஒதுக்கப்பட்ட வகிபாகம் தொடர்பான பொது வரைவிலக்கணம் -

இச் சேவை வகை வடக்கு மாகாணத்தின் உரிய அமைச்சின் கீழான நிறுவனத்தின் பொதுவான களச்செயற்பாட்டுப் பணிகளின் ஆரம்ப நிலைத்தேவையான நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதிலும் பராமரிப்பதிலும் உதவுகின்றதுமானதும் குறிப்பிடத்தக்க திறன்களோ பகுதியளவான திறன்களோ இன்றி செய்யப்படக்கூடியதுமான அடிப்படைக் கடமைகள் சுமத்தப்படும் பல் கடமை வகைத் தொகுதிச் சேவையாக கருதப்படுகின்றது.

4.4 **பணிகளின் ஒப்படைப்பு**

பணிகள் தர அடிப்படையில் ஒப்படைக்கப்படமாட்டாது. நியமன அதிகாரி அல்லது திணைக்களத் தலைவர் இச்சேவைத் தொகுதிக்குரிய எந்த ஒரு பணியையும் எந்த ஒரு அலுவலரிடமும் அவரது முதுமுறை மற்றும் திறனை அடிப்படையாகக் கொண்ட ஒப்படைக்கலாம்.

**4.5 பதவிகளின் இயல்பு: நிரந்தரமானதும் ஓய்வுதியத்திற்குரியதுமானதும்**

இப்பதவி ஆரம்ப மட்ட தேர்ச்சியற்ற ஆட்சேர்க்கப்பட்ட / நியமிக்கப்பட்ட III ஆம் தரம் II ஆம் தரம் I ஆம் தரம் மற்றும் விசேட தரங்களைச் சார்ந்த பின்வரும் சம்பள அளவுத் திட்டத்திற்குரிய தொழிலாளி சேவையைக் (பிரத்தியேக ஆளணி) கொண்டமைந்தது ஆகும்.

5. **மாதாந்த இணைந்த சம்பள அளவுத் திட்டங்கள்:**

5.1 ஊழியர் வகைக்குரிய குறியீட்டு இலக்கமும் மாதாந்த சம்பள அளவுத்திட்டமும்:

rk;gs FwpaPL : PL -01 – 2016

rk;gs msTj;jpl;lk; 24,250 – 10 x250 – 10 x 270 – 10 x 300 – 12 x 330- 36,410/-

5.2 ஊழியர் வகைக்குரிய தரங்களும் அத்தரங்களுக்குரிய ஆரம்ப மாதச் சம்பளப் படிமுறைகளும்:

| தரம் | ஆரம்ப சம்பள படிநிலை | சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|
| தரம் III | 01 | 24250 - 10 x 250 - 28750/= |
| தரம் II | 12 | 27020 - 14 x 270 – 30800/= |
| தரம் I | 22 | 29750 - 14 x 300 - 33950/= |
| விசேட தரம் | 32 | 32780 - 11 x 330 - 36410/= |

5.3 சேவைக்கு நியமனம் செய்யப்படும் அலுவலர்கள் மூன்று வருட கால தகுதி காண் காலத்திற்குட்பட்டவர்களாவர்.

**06. சேவைத்தொகுதியின் கீழ் அடங்கும் பதவிகள்**

6.1 முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் பதவிப் பெயரும் ஆளணியும்

| **அனுமதிக்கப்பட்ட பதவிப் பெயர்கள்** | **அனுமதிக்கப்பட்ட பதவிக்கான தரங்கள்** | **அனுமதிக்கப்பட்ட ஆளணி** | **கடமைகள்** |
|---|---|---|---|
| திணைக்களத் தொழிலாளி (பிரத்தியேக ஆளணி) | தரம் III ,II,I மற்றும் விசேட தரம் | 01 | பின்னிணைப்பு I |

6.2 முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி -01 ( பிரத்தியேக ஆளணி)திணைக்களத் தொழிலாளி (பிரத்தியேக ஆளணி ) சேவை தரம் III,II,I மற்றும் விசேட தரம் முதலியவற்றினதும் ஆளணிகள் பதவியுயர்வு நோக்கத்திற்காக ஒன்றிணைக்கப்படும்

07. ஆட்சேர்ப்பு முறைமை :-பொருத்தமற்றது

08. வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள்

8.1 வினைத்திறன் தடைப்பரீட்சையில் உரிய காலப்பகுதிக்குள் சித்திபெறாவிடின் சம்பள ஏற்றங்களும் பதவியுயர்த்தலும் பிற்போடப்படும்.

8.2 வினைத்திறன் தடைப்பரீட்சை நடாத்தப்படவேண்டிய காலப்பகுதி : வருடத்தில் இரண்டு தடவைகள்.

8.3 வினைத்திறன் தடைப்பரீட்சையை நடாத்துவதற்கான அதிகாரி : வடமாகாண தொழிற்துறைத் திணைக்களம் இணைக்கப்பட்டுள்ள அமைச்சின் செயலாளர்.

**09. வினைத்திறன்காண் தடை தாண்டல்:**

09.1 பரீட்சைகளின் விபரங்கள்

| **வினைத்திறன்காண் தடையின் விபரங்கள்** | **எத்தனை வருடங்களிற்குள் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்** | **வினைத்திறன் காண் தடைப்பரீட்சையின் தன்மை** |
|---|---|---|
| முதலாம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | தரம் III இற்குரிய நியமனம் பெற்றதிலிருந்து 3 ஆண்டுகள் முடிவதற்கு முன்னர் | வாய்மொழிப் பரீட்சை (பாடத்திட்டம் **பின்னிணைப்பு II**) |
| இரண்டாம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | தரம் II இற்குரிய நியமனம் பெற்றதிலிருந்து 3 ஆண்டுகள் முடிவதற்கு முன்னர் | வாய்மொழிப் பரீட்சை (பாடத்திட்டம் **பின்னிணைப்பு** II) |
| மூன்றாம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | தரம் I இற்குரிய நியமனம் பெற்றதிலிருந்து 5 ஆண்டுகள் முடிவதற்கு முன்னர் | வாய்மொழிப் பரீட்சை (பாடத்திட்டம் **பின்னிணைப்பு II**) |

**10.<u>மொழித் தேர்ச்சி</u>**

| மொழி | பெறப்பட வேண்டிய தேர்ச்சி |
|---|---|
| 01.அரச கரும மொழி | ஏதும் ஒரு அரச கரும மொழியல்லாத மொழி முலம் சேவையில் சேர்க்கப்பட்ட பணியாளர்கள் தகுதி காண் கால முடிவுக்குள் ஏதும் ஒரு அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும் |
| 02.மற்றைய அரச கரும மொழி | 1 / 2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையினாலும் அதன் பின்பான சுற்றறிக்கையினதும் ஏற்பாட்டிற்கமைய இயைபுடைய மட்டத்தேர்ச்சியை பெறுதல் வேண்டும் |

**11.தரங்களுக்கான பதவியுயர்வு**

**11.1 தரம் III இலிருந்து தரம் II ற்கான பதவியுயர்வு**

11.1.1 – சாதாரண மட்டத்தில் செயலாற்றுகைளை வெளிப்படுத்துவார்கள்

அ. முன் தேவைப்பாடுகள்

I. பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்

II. ஊழியர் வகையில் தரம் III இல் ஆகக்குறைந்தது பத்து (10) வருடங்கள் உயிர்ப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தை கொண்டிருத்தலும். உரிய தினத்தில் பத்து (10) சம்பள ஏற்றங்களைப் உழைத்து பெற்றிருத்தலும்

III. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகைக் கணிப்பீட்டு நடைமுறைக்கு இணங்க கிட்டியபத்து (10) வருடங்களிலும் விசேட செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

IV. தரவுயர்வுத் தினத்திற்கு கிட்டிய ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

V. உரிய மட்டத்தில் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை உரிய காலத்தில் பெற்றிருத்தல்

VI. உரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

11.1.2 பதவியுயர்வுக்கான முறைமை

தேவைப்படும் தகைமைகளைப் பெறும் பணியாளர் ஒருவர் நியமன அதிகாரிக்கு குறித்துரைக்கப்பட்ட மாதிரிக்கமைந்த **பின்னிணைப்பு III** படிவத்தில் பதவியுயர்வுக்கு விண்ணப்பிக்குமிடத்து திணைக்களத் தலைவரதும் இயைபுடைய அமைச்சுச் செயலாளரதும் விதந்துரைக்கமைய, பணியாளர் தகைமைகளைப் பூர்த்தி செய்த தினம் முதல் வலுவுடையதாக தரம் III இலிருந்து தரம் II இற்கு நியமன அதிகாரியினால் பதவியுயர்வு வழங்கப்படும்.

**11.2 தரம் II இலிருந்து தரம் I இற்கு தரமுயர்த்துதல்**

12.2.1 – சாதாரணமட்டத்தில் செயலாற்றுகை வெளிப்படுத்துபவர்கள்.

(அ) முன்தேவைப்பாடுகள்

I. ஊழியர் வகையில் தரம் II இல் ஆகக் குறைந்தது ஒன்பது (09) வருடங்கள் உயிர்ப்பானதும் திருபதிகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும். ஒன்பது (9) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தலும்.

II. தரமுயர்வுத் திகதிக்கு கிட்டிய ஐந்து (05) வருடங்களில் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

III. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகைக் கணிப்பீட்டு நடைமுறைக்கு இணங்க தரமுயர்வுத் திகதிக்கு முன்னரான ஒன்பது வருடங்களில் (09) திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையை வெளிக்காட்டியிருத்தல்.

IV. உரிய வினைத்திறனகாண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.

11.2.2<u>பதவியுயர்வுக்கான முறைமை</u>

தேவைப்படும் தகைமைகளைப் பெறும் பணியாளர் ஒருவர் நியமன அதிகாரிக்கு குறித்துரைக்கப்பட்ட மாதிரிக்கமைந்த **பின்னிணைப்பு IV** படிவத்தில் பதவியுயர்வு கோரி விண்ணப்பிக்குமிடத்து திணைக்களத் தலைவரதும் இயைபுடைய அமைச்சுச் செயலாளரதும் விதந்துரைக்கமைய, பணியாளர் தகைமைகளைப் பூர்த்தி செய்த தினம் முதல் வலுவுடையதாக தரம் II இலிருந்து தரம் I இற்கு நியமன அதிகாரியினால் பதவியுயர்வு வழங்கப்படும்.

**11.3 <u>தரம் I இலிருந்து விசேட தரத்திற்கான பதவியுயர்வு</u>**

(அ) முன்தேவைப்பாடுகள்

I. தரமுயர்வுத் தகைமைபெறும் திகதியில் ஊழியர் வகையில் தரம் I இல் ஆகக் குறைந்தது ஒன்பது (9) வருடங்கள் உயிர்ப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும்.ஒன்பது (09) சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தலும்.

II. தரமுயர்வுத் தினத்திற்கு கிட்டிய ஐந்து வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

III. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகைக் கணிப்பீட்டு நடைமுறைக்கு இணங்க தரமுயர்வுத் தினத்திற்கு முன்னரான ஒன்பது (09) வருடங்களில் திருப்திகரமானதுமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்ந்தளவிலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

IV. உரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உரிய திகதியில் சித்தியடைந்திருத்தல்

12.3.1–<u>பதவியுயர்வுக்கான முறைமை</u>

தேவைப்படும் தகைமைகளைப் பெறும் பணியாளர் ஒருவர் நியமன அதிகாரிக்கு குறித்துரைக்கப்பட்ட மாதிரிக்கமைந்த **பின்னிணைப்பு V** படிவத்தில் பதவியுயர்வு கோரி விண்ணப்பிக்குமிடத்து அவரது தகைமைகள் நியமன அதிகாரியால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பின் திணைக்களத் தலைவரதும் இயைபுடைய அமைச்சுச் செயலாளரதும் விதந்துரைக்கமைய பணியாளர் தகைமைகளைப் பூர்த்தி செய்த தினம் முதல் வலுவுடையதாக தரம் I இலிருந்து விசேட தரத்திற்கு பதவியுயர்வு வழங்கப்படும்.

**<u>ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள்</u>**

இச் சேவைப் பதவியுயர்வுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிராத எவ்விடயம் தொடர்பிலும் வடமாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் தீர்மானம் எடுக்கப்படும்.

| | |
|---|---|
| தயாரித்தவர் | செவ்வைபார்த்தவர்<br>(விடயத்திற்குப்பொறுப்பானபதவிநிலை அலுவலர்) |
| ஒப்பம்................................ | ஒப்பம்................................ |
| பெயர்:-மா.தயாகுமாரன் | பெயர் திருமதி.ச. தர்மராஜா |
| பதவி:-அபிவிருத்தி உத்தியோகத்தர் | பதவி:-நிர்வாக உத்தியோகத்தர் |

செயலாளர்
பெண்கள் விவகாரங்கள் அமைச்சு
வடக்குமாகாணம்

தொழிற்துறைத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட திணைக்களத் தொழிலாளி (பிரத்தியேக ஆளணி) பதவிக்கான பதவியுயர்வுத் திட்டம் (இணைப்பு I, II, III, IV, V அடங்கலாக 01 – 15 பக்கங்கள் வரை) சிபாரிசு செய்யப்படுகிறது.

திரு.செ.வனஜா
மாகாணப்பணிப்பாளர், திகதி:
தொழிற்துறைத் திணைக்களம்,
வடமாகாணம்.

செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்.

தொழிற்துறைத் திணைக்களத்தின் கீழுள்ள அங்கிகரிக்கப்பட்ட திணைக்கள தொழிலாளி (பிரத்தியேக ஆளணி) பதவிக்கான பதவியுயர்வுத் திட்டம் (இணைப்பு I, II, III, IV, V அடங்கலாக 01 – 15 பக்கங்கள் வரை) சிபாரிசு செய்யப்படுகிறது.

ஆர்.வரதலிங்கம்
செயலாளர்
மகளிர் விவகாரங்கள் அமைச்சு திகதி:29.10.2020
வடக்கு மாகாணம்.

கௌரவ ஆளுநர்,
வடக்கு மாகாணம்

தொழிற்துறைத் திணைக்களத்தின் கீழுள்ள அங்கிகரிக்கப்பட்ட திணைக்கள தொழிலாளி பதவிக்கான பதவியுயர்வுத் திட்டம் (இணைப்பு I, II, III, IV, V அடங்கலாக 01 – 15 பக்கங்கள் வரை) மாகாண பொதுச்சேவை ஆணைக்குவினால் சிபாரிசு செய்யப்பட்டு தங்களின் அங்கீகாரத்தின் பொருட்டு கௌரவத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு திகதி:25.11.2020
வடக்கு மாகாணம்.

அங்கீகரிக்கப்படுகிறது.

பீ.எஸ்.எம்.சாள்ஸ்
ஆளுநர்
வடக்கு மாகாணம். திகதி: 01.12.2020

**பின்னிணைப்பு I**

**உத்தியோகத்தரின் செயற்பாடுகள்.**

அ. கடமைக்கு சரியான நேரத்தில் வருதல்.

ஆ. அலுவலகக் கட்டடம் மற்றும் வளாகத்தினை பொறுப்பேற்றல்

இ. அலுவலக இருப்புக்களின் பாதுகாப்பை உறுதிசெய்தல்.

ஈ. அலுவலக வளாகத்தினை பராமரித்தல்.

உ. பூக்கும் தாவரங்களினையும், நிழலிற்காக வைக்கப்பட்ட தாவரங்களினையும் பராமரித்தல்.

ஊ. அலுவலக காரணங்களுக்காக அலுவலகத்திற்கு வருகைதரும் விருந்தினர்களின் வருகையினை பதிவு செய்தல்.

எ. வெளிப்புற தொலைபேசி வசதிகள் இருந்தால், உள்வரும் அழைப்புக்களில் பெற்ற தகவல் முக்கியமானதெனில் அவற்றை சம்மந்தப்பட்ட அதிகாரிக்கு அறிவித்தல்.

ஏ. சேவைக்கு உட்படாத நாட்களான சனிக்கிழமை, மற்றும் பொது விடுமுறை நாட்களிலும் தேவைக்கேற்ப கடமைக்கு சமூகமளித்தல்.

ஐ. நீர் மற்றும் மின் விரயம் மற்றும் ஏனைய வளங்களின் விரயத்தினை தடுப்பதற்காக உடனடியாக நடவடிக்கையினை எடுத்தல்.

ஒ. அலுவலக சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கு பொறுப்பான அலுவலகருக்கு ஒத்துழைப்பினை வழங்குதல்

ஔ. திணைக்கள தலைவரால் நியமிக்கப்படும் ஏனைய வேறு கடமைகளில் ஈடுபடல்.

**01. வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை.**

வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் விபரம்.

| வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | தேர்வில் தேர்ச்சிபெறுவதற்கான காலமுடிவு. (ஆண்டுகளின் எண்ணிக்கை.) | எழுத்துப்பரீட்சை/ தொழிற்பரீட்சை/ சான்றிதழ் கற்கைகள் ஏனைய வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையின் தன்மை. |
|---|---|---|
| 1வது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | தரம் III ற்கான நியமன திகதியிலிருந்து 03 வருடங்கள் முடிவதற்கு முன்பு | <u>வாய் மொழி மூலப் பரீட்சை</u><br>• அவர் பணியாற்றும் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்படும் பணிகளில் இருந்து போதியளவு அறிவினை ஊழியர் பெற்றுக் கொள்கிறாரா என்பதை பரீட்சிப்பதற்கு – 30 புள்ளிகள்<br>• தனது சேவை தொடர்பாக பொது அலுவலக முறைமை மற்றும் நிறுவன நிர்வாக முறைமையில் போதியளவு அறிவினை ஊழியர் பெற்றுக் கொள்கிறாரா என்பதை பரீட்சிப்பதற்கு – 30 புள்ளிகள்<br>• தனது பதவிக்கு ஒப்படைக்கப்படும் பல்வேறு பணிகள் தொடர்பாக போதியளவு அறிவினையும் தேர்ச்சியினையும் ஊழியர் பெற்றுக் கொள்கிறாரா என்பதை பரீட்சிப்பதற்கு – 40 புள்ளிகள் |
| 2வது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | தரம் II ற்கான நியமன திகதியிலிருந்து 03 வருடங்கள் முடிவதற்கு முன்பு | <u>வாய் மொழி மூலப் பரீட்சை</u><br>1வது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் உள்ளடக்கப்பட்ட பாடங்கள் மற்றும் ஊழியரின் திறன்கள் தொடர்பாக கடந்த காலகட்டத்தில் துறையில் செய்யப்பட்ட நடைமுறை மற்றும் சட்ட திருத்தங்கள் குறித்த ஊழியரின் அறிவை பரீட்சிப்பதற்கு<br>(1வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் பிரிவிற்கேற்ப புள்ளிகள் ஒதுக்கப்படும்) |
| 3வது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | தரம் I ற்கான நியமன திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவதற்கு முன்பு | <u>வாய் மொழி மூலப் பரீட்சை</u><br>1வது மற்றும் 2வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் உள்ளடக்கப்பட்ட பாடங்கள் மற்றும் ஊழியரின் திறன்கள் தொடர்பாக கடந்த காலகட்டத்தில் துறையில் செய்யப்பட்ட நடைமுறை மற்றும் சட்ட திருத்தங்கள் குறித்த ஊழியரின் அறிவை பரீட்சிப்பதற்கு<br>(1வது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையின் பிரிவிற்கேற்ப புள்ளிகள் ஒதுக்கப்படும்)) |

a.வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை இடம்பெறும் கால எண்ணிக்கை : வருடத்திற்கு இரண்டு முறை

b. வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையை நடாத்தும் அதிகாரி : நியமன அதிகாரி

C.வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெறுவதற்கான ஆகக்குறைந்த புள்ளி: 40 புள்ளி

பின்னிணைப்பு III

**திணைக்களத் தொழிலாளி (பிரத்தியேக ஆளணி) தரம்III இருந்து தரம்IIற்கு பதவியுயர்வதற்கான விண்ணப்ப படிவம்**

1.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :……………………………………………..

1.2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் : …………………………………………….

1.3 பிறந்த திகதி : …………………………………………………….

1.4 தேசிய அடையாள அட்டை : …………………………………………………….

1.5 திணைக்களத் தொழிலாளி (பிரத்தியேக ஆளணி) சேவையின் நியமனத் திகதி :……

1.6 சேவை உறுதி செய்யப்பட்ட நியமனத் திகதி : ………………………………………

1.7 வினைத்திறனகாண் தடைதாண்டல் பரீட்சையில்
சித்தி பெற்ற திகதி : …………………………...………………………………..

1.8 10 வருட கால சேவையினை பூர்த்தி செய்த திகதி : …………………………........

1.9 அலுவலகத்தின் பெயரும் முகவரியும் : …………………………………………….

.விண்ணப்பதாரரின் பிரகடனம்

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் செம்மையானவை என்றும் இதன் மூலம் வெளிப்படுத்துகின்றேன். மேலும் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை எனப் பதவியுயுர்வுக்கு முன் கண்டறியப்பட்டால் நான் தகுதி நீக்கத்திற்கு உள்ளாக்கப்படுதற்கும் பதவியுயர்வுக்கு பின்னர் கண்டறியப்பட்டால் எனது பதவியுயர்வு மீளப்பெறப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றேன். எனக்கு மாகாண ஆரம்ப தர தேர்ச்சியற்ற வகுதிச் சேவையின் II ஆம் தரத்திற்கு ..............ஆம் திகதி முதல் பதவியுயர்வு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி:- ........................ ...............................
விண்ணப்பதாரரின் ஒப்பம்

அமைச்சின் செயலாளர் அவர்கள்
வடமாகாணம்.

இப் பணியாளர்

I. தரம் III ல் பத்து வருட உயிர்ப்பானதும் திருப்திகரமானதுமான சேவையைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை
II. பதவியுயர்வுக்கு உடன் முந்திய 10 வருட காலத்தில் தரம் III இல் திருப்திகரமான அல்லது அதற்கு மேலான செயற்பாட்டினைக் காண்பித்துள்ளார் / காண்பிக்கவில்லை.
III. பதவியுயர்வுக்கு உடன் முந்திய 5 ஆண்டுக்காலத்தில் திருப்திகரமான சேவையைப்பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.
IV. குறித்த 10 ஆண்டுக்காலத்தில் சம்பளமற்ற / அரைச்சம்பள விடுதலைகளைப் பெறவில்லை / பெற்றுள்ளார்.
V. குறித்த காலப்பகுதிக்குள் எச்சரிக்கை தவிர்ந்த வேறெந்த தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை / உள்ளாகியுள்ளார்
VI. அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது / எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது / எடுக்கப்படவோ அல்லது உத்தேசிக்கப்படவோ இல்லை.
VII. குறித்த காலப்பகுதிக்குரிய சம்பள வேற்றங்கள் யாவும் உழைக்கப்பட்டுள்ளன / உழைக்கப்படவில்லை.
VIII. நியமனத்தில் …………… ஆம் திகதி முதல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் / இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.
IX. 1ம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார்.
X. மற்றைய உத்தியோக மொழியிற் சித்தி பெறும் தேவையினைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.

மேற்படி பணியாளர் திரு. ………………………… அவர்கள் ஆரம்ப மட்ட தொழிற்தேர்ச்சியற்ற வகுதிச் சேவையில் தரம் II பதவியுயர்வுக்கு பொதுவான செயற்பாட்டின் கீழ் தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் எனவும் நான் திருப்தி அடைகிறேன். இதற்கமைய ……………. திகதி முதல் அவரது தரம் II இற்கான பதவியுயர்வு விதந்துரைக்கப்பட்டு விண்ணப்பம் முன்னளிக்கப்படுகின்றது.

திகதி:- ...................

மாகாணப்பணிப்பாளர்
தொழிற்துறைத் திணைக்களம்
வடமாகாணம்.

…………………………….. ஆம் திகதி முதல் தரம் II இற்கு பதவியுயர்வு அனுமதிக்கப்படுகின்றது / அனுமதிக்கப்படவில்லை.

அமைச்சின் செயலாளர்
வடமாகாணம்

பின்னிணைப்பு IV

**திணைக்களத் தொழிலாளி (பிரத்தியேக ஆளணி ) தரம் IIஇருந்து தரம் Iற்கு பதவியுயர்வதற்கான விண்ணப்ப படிவம்**

1.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :……………………………………………..

1.2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் : …………………………………………….

1.3 பிறந்த திகதி : ……………………………………………………….

1.4 தேசிய அடையாள அட்டை : ……………………………………………………….

1.5 திணைக்களத் தொழிலாளி (பிரத்தியேக ஆளணி) சேவையின் நியமனத் திகதி :……

1.6 சேவை உறுதி செய்யப்பட்ட நியமனத் திகதி : ………………………………………

1.7 தரம் II ற்கு பதவியுயர்ந்த திகதி:……………………………………………………..

1.8 வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில்

சித்தி பெற்ற திகதி(தரம்II)………………………...………………………………..

1.9 09 வருட கால சேவையினை பூர்த்தி செய்த திகதி : …………………………........

1.10அலுவலகத்தின் பெயரும் முகவரியும் : …………………………………………….

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் இதில் வழங்கப்பட்ட விடயங்கள் யாவும் உண்மையானதெனவும் நான் உறுதிசெய்கிறேன்.

2. .விண்ணப்பதாரரின் பிரகடனம்

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் செம்மையானவை என்றும் இதன் மூலம் வெளிப்படுத்துகின்றேன். மேலும் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை எனப் பதவியுயுர்வுக்கு முன் கண்டறியப்பட்டால் நான் தகுதி நீக்கத்திற்கு உள்ளாக்கப்படுதற்கும் பதவியுயர்வுக்கு பின்னர் கண்டறியப்பட்டால் எனது பதவியுயர்வு மீளப்பெறப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றேன் .எனக்கு மாகாண ஆரம்பதர தேர்ச்சியற்ற வகுதிச் சேவையின் II ஆம் தரத்திற்கு ..............ஆம் திகதி முதல் பதவியுயர்வு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி:- ........................ ...............................

விண்ணப்பதாரரின் ஒப்பம்

அமைச்சின் செயலாளர் அவர்கள்
வடமாகாணம்.

இப் பணியாளர்

I. தரம் II ல் ஒன்பது வருட கால உயிர்ப்பானதும் திருப்திகரமானதுமான சேவையைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை
II. பதவியுயர்வுக்கு உடன் முந்திய 9வருட காலத்தில் தரம் II ல் திருப்திகரமான அல்லது அதற்கு மேலான செயற்பாட்டினைக் காண்பித்துள்ளார் / காண்பிக்கவில்லை.
III. பதவியுயர்வுக்கு உடன் முந்திய 5 ஆண்டுக்காலத்தில் திருப்திகரமான சேவையைப்பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.
IV. குறித்த 9 ஆண்டு காலத்தில் சம்பளமற்ற / அரைச்சம்பள விடுதலைகளைப் பெறவில்லை / பெற்றுள்ளார்.
V. குறித்த காலப்பகுதிக்குள் எச்சரிக்கை தவிர்ந்த வேறெந்த தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை / உள்ளாகியுள்ளார்
VI. அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது / எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது / எடுக்கப்படவோ அல்லது உத்தேசிக்கப்படவோ இல்லை.
VII. குறித்த காலப்பகுதிக்குரிய சம்பள வேற்றங்கள் யாவும் உழைக்கப்பட்டுள்ளன / உழைக்கப்படவில்லை.
VIII. நியமனத்தில் …………… ஆம் திகதி முதல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் / இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.
IX. 1ம் 2ம் .வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளில் சித்தி பெற்றுள்ளார்.
X. மற்றைய உத்தியோக மொழியிற் சித்தி பெறும் தேவையினைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.

மேற்படி பணியாளர் திரு. ………………………… அவர்கள் ஆரம்ப மட்ட தொழிற்தேர்ச்சியற்ற வகுதிச் செவையில் தரம் I பதவியுயர்வுக்கு பொதுவான செயற்பாட்டின் கீழ் தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் எனவும் நான் திருப்தி அடைகிறேன்.இதற்கமைய …………….. திகதி முதல் அவரது தரம் I இற்கான பதவியுயர்வு விதந்துரைக்கப்பட்டு விண்ணப்பம் முன்னளிக்கப்படுகின்றது.

திகதி:- ………………..

மாகாணப்பணிப்பாளர்,
தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்.

…………………………….. ஆம் திகதி முதல் தரம் I இற்கு பதவியுயர்வு அனுமதிக்கப்படுகின்றது / அனுமதிக்கப்படவில்லை.

அமைச்சின் செயலாளர்
வடமாகாணம்

**பின்னிணைப்பு V**

**<u>திணைக்களத் தொழிலாளி (பிரத்தியோக ஆளணி) தரம்I இருந்து விசேட தரத்திற்கு பதவியுயர்வதற்கான விண்ணப்ப படிவம்</u>**

1.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :……………………………………………..

1.2 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் : …………………………………………….

1.3 பிறந்த திகதி : ……………………………………………………

1.4 தேசிய அடையாள அட்டை : ……………………………………………………

1.5 திணைக்களத் தொழிலாளி (பிரத்தியேக ஆளணி) சேவையின் நியமனத் திகதி :………

1.6 சேவை உறுதி செய்யப்பட்ட நியமனத் திகதி : ………………………………………

1.7 தரம் I ற்கு பதவியுயர்ந்த திகதி:……………………………………………………..

1.8 வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில்

சித்தி பெற்ற திகதி(தரம்I)………………………...………………………………..

1.11 09 வருட கால சேவையினை பூர்த்தி செய்த திகதி : …………………………........

1.12அலுவலகத்தின் பெயரும் முகவரியும் : …………………………………………….

2. .<u>விண்ணப்பதாரரின் பிரகடனம்</u>

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் செம்மையானவை என்றும் இதன் மூலம் வெளிப்படுத்துகின்றேன். மேலும் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை எனப் பதவியுயுர்வுக்கு முன் கண்டறியப்பட்டால் நான் தகுதி நீக்கத்திற்கு உள்ளாக்கப்படுதற்கும் பதவியுயர்வுக்கு பின்னர் கண்டறியப்பட்டால் எனது பதவியுயர்வு மீளப்பெறப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றேன். எனக்கு மாகாண ஆரம்பதர தேர்ச்சியற்ற வகுதிச் சேவையின் விசேட தரத்திற்கு ..............ஆம் திகதி முதல் பதவியுயர்வு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி:- ........................

...............................

விண்ணப்பதாரரின் ஒப்பம்

அமைச்சின் செயலாளர் அவர்கள்
வடமாகாணம்.

இப் பணியாளர்

I. தரம் I ல் ஒன்பது வருட கால உயிர்ப்பானதும் திருப்திகரமானதுமான சேவையைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை

II. பதவியுயர்வுக்கு உடன் முந்திய 10 வருட காலத்தில் 9வருட காலத்தில் தரம் I ல் திருப்திகரமான அல்லது அதற்கு மேலான செயற்பாட்டினைக் காண்பித்துள்ளார் / காண்பிக்கவில்லை.

III. பதவியுயர்வுக்கு உடன் முந்திய 5 ஆண்டுக்காலத்தில் திருப்திகரமான சேவையைப்பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.

IV. குறித்த 9 ஆண்டு காலத்தில் சம்பளமற்ற / அரைச்சம்பள விடுதலைகளைப் பெறவில்லை / பெற்றுள்ளார்.

V. குறித்த காலப்பகுதிக்குள் எச்சரிக்கை தவிர்ந்த வேறெந்த தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை / உள்ளாகியுள்ளார்

VI. அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது / எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது / எடுக்கப்படவோ அல்லது உத்தேசிக்கப்படவோ இல்லை.

VII. குறித்த காலப்பகுதிக்குரிய சம்பள வேற்றங்கள் யாவும் உழைக்கப்பட்டுள்ளன / உழைக்கப்படவில்லை.

VIII. நியமனத்தில் …………… ஆம் திகதி முதல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார் / இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

IX. 1ம் 2ம் 3ம் .வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளில் சித்தி பெற்றுள்ளார்.

X. மற்றைய உத்தியோக மொழியிற் சித்தி பெறும் தேவையினைப் பூர்த்தி செய்துள்ளார் / செய்யவில்லை.

மேற்படி பணியாளர் திரு. ………………………… அவர்கள் ஆரம்ப மட்ட தொழிற்தேர்ச்சியற்ற வகுதிச் சேவையில் விசேட பதவியுயர்வுக்கு பொதுவான செயற்பாட்டின் கீழ் தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் எனவும் நான் திருப்தி அடைகிறேன்.இதற்கமைய ……………. திகதி முதல் அவரது விசேட தரத்திற்கான பதவியுயர்வு விதந்துரைக்கப்பட்டு விண்ணப்பம் முன்னளிக்கப்படுகின்றது.

திகதி:- ...................

…..……………

மாகாணப்பணிப்பாளர்,
தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகணம்

…………………………….. ஆம் திகதி முதல் விசேட தரத்திற்கு இற்கு பதவியுயர்வு அனுமதிக்கப்படுகின்றது / அனுமதிக்கப்படவில்லை.

அமைச்சின் செயலாளர்
வடமாகாணம